**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SEESSIONS JUDGE, SALEM.**

**O.S.No.418/2018**

Date: 09.01.2023

PW1- சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு திருமணம் முடிந்த 1996 ம் ஆண்டு முதல் 2008 வரை நான் இல்லத்தரசியாக தான் இருந்து வந்தேன் என்றால் சரிதான். 2008 ம் ஆண்டு நான் மகளிர் சுயஉதவி குழுவில் கணக்காளராக பணியில் சேர்ந்தேன். அந்த சமயத்தில் நான் மாதம் ரூ.30,000/- முதல் ரூ.40,000/- வரை சம்பாதித்து வந்தேன். நான் அவ்வாறு பணிபுரிந்த மகளிர் குழுவில் 12 உறுப்பினர்கள் இருந்தார்கள். நான் 2008 ம் ஆண்டு மாதம் ரூ.40,000/- வரை சம்பாதித்து வந்தேன் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை.

2009-2010 ம் ஆண்டில் எனது மாத வருமானம் எவ்வளவு என்று காட்டுவதற்கு உரிய ஆவணம் எதுவும் இல்லை. எனது வங்கி கணக்கானது 2008 ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சேலம் கோட்டையில் உள்ள பேங்க் ஆப் பரோடா வங்கியில் கணக்கு ஆரம்பித்தேன். 2008 முதல் 2010 வரையிலான எனது வங்கி கணக்கை நீதிமன்றம் கேட்டால் கொடுப்பதற்கு தயாராக இருக்கிறேன். அந்த காலக்கட்டத்தில் எனது வங்கி பரிவர்த்தனைகளானது ரூ.40,000/-க்குள்ளாக இருக்கும். அந்த காலக்கட்டத்தில் எனது கணவர் ஏற்றுமதி நிறுவனங்களுக்கு வேலைக்கு கூப்பிட்டால் சென்று வந்து கொண்டிருந்தார். அப்போது அவரது தினக்கூலி ரூ.60 முதல் ரூ.90 வரையிருக்கும்.

எனக்கு திருமணம் நடந்ததிலிருந்து எனது கணவரை நான் பிரிந்து சென்றது வரை எனது கணவரின் வருமானத்தில் சாப்பிடவில்லை. எனது குழந்தைகளுககும் நான் தான் சம்பாதித்து போட்டேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு சுமார் ஒரு வாரத்திற்கு முன்பாக என் கணவர் சேலம் குடும்ப நல நீதிமன்றத்தில் என் மீது விவாகரத்து கோரி வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த மனுவில் இடைக்கால ஜீவனாம்சம் கோரி நான் மனுதாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த இடைக்கால மனுவிற்கு ஆதரவாக என்னால் தாக்கல் செய்யப்பட்ட சத்யபிரமாண வாக்குமூலத்தில் எனது கணவர் வாசுகி பள்ளியில் பணிபுரிந்தும், செவ்வாய்பேட்டையில் மொத்தவியாபார கடைகளில் பணிபுரிந்தும் மாதம்

ரூ.40,000/- சம்பாதித்து வருகிறார் என்று சொல்லியிருக்கிறேன். அந்த மனுவில் நான் எனது கணவரும், நானும ஒன்றாக இருந்தபோது எனது கணவர் தான் என்னையும், எனது குழந்தைகளையும் பராமரித்து வந்தார் எனவும், அவர் எங்களை பிரிந்து சென்றதற்கு பிறகு எங்களை பராமரிக்க மறுப்பதாகவும், எனவே நான் வாழ்வாதரத்திற்கு சிரமப்பட்டு வருவதாகவும் சொல்லியிருக்கிறேன் என்றால் சரியல்ல.

அந்த மனுவில் எனது கணவர் எனக்கு மாதம் ரூ.2 ஆயிரம் இடைக்கால ஜீவனாம்சமாக கொடுக்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றாலும், அந்த உத்தரவின் படி நான் இன்றுவரை ஜீவனாம்ச தொகை பெற்று வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்திலுள்ள வீட்டை கட்டுவதற்கு நானும், எனது கணவரும் சேர்ந்து கஸ்துரி பாய் கூட்டுறவு வங்கியில் கடன் வாங்கியிருக்கிறோம் என்றால் கட்டி முடித்ததற்கு பிறகுதான் வாங்கினோம். நான் வேலை செய்யும் மகளிர் சுயஉதவி குழுவீற்காக நான் சேலம் இந்தியன் வங்கி, மற்றும் விஜயா வங்கியில் கடன் வாங்கியிருக்கிறேன் என்றால் சரிதான். அந்தகடன் தொகையை நான் குழுவின் நலனுக்காக தான் செலவு செய்தேன். அந்த தொகையை நான் வீடு கட்டுவதற்காக பயன்படுத்தவில்லை.

எனது தோழிகளான ராணி, சிவகாமி, அம்பிகா, சித்ரா, சசிகல, வசந்தி, ராணி, செந்தமிழ் ஆகியோரிடமிருந்து நான் கடன் பெற்றேன் என்று காட்டுவதற்கு ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. கிரய தொகையை நான் தான் கொடுத்தேன் என்று காட்டுவதற்குரிய ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. வீடு கட்டுவதற்கு நான் ரூ.20 லட்சம் கொடுத்தேன் என்று காட்டுவதற்கு உரிய ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. எனது கணவரின் உழைப்பினால் கிடைத்த தொகையை கொண்டு தான் தாவா சொத்தானது வாங்கப்பட்டு அதில் வீடு கட்டப்பட்டது என்றாலும், பாக்கி வேலைகளை செய்வதற்கு பணம் தேவைப்பட்டதால் தான் நானும், எனது கணவரும் சேர்ந்து கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றோம் என்றாலும் சரியல்ல.

விவாகரத்து வழக்கில் நான் நேர்ட்டிஸ் பெற்றுக்கொண்டதற்கு பிறகுதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். 21.05.2014 ம் தேதி அன்று தான் நானும், எனது கணவரும் வசித்து வந்த தாவா வீட்டிலிருந்து நான் வெளியேறி எனது தந்தை வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால் சரிதான். அப்போது நான்

என்னுடன் 45 பவுன் நகையை எடுத்து சென்றுவிட்டேன் என்றால் சரியல்ல. அன்றைய தினம் என் கணவர் என் மீது சேலம் அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். தாவா வீடானது இரண்டு மாடி கட்டிடம் என்று சொன்னால் சரிதான். அந்த வீட்டின் தரை தளம் மற்றும முதல் மாடியை ஒரு அன்பு செல்வன் என்பவருக்கு நான் மாத வாடகைக்கு விட்டேன் என்றால் சரியல்ல. எனது கணவர் தான் அவருக்கு போக்கியத்திற்கு கொடுத்தார். எனக்கும் அன்புசெல்வத்திற்கும் இடையே தான் போக்கிய ஒப்பந்தம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் போக்கிய பத்திரம் எனக்கும் அன்புசெல்வத்திற்கும் இடையே ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல.

எனது கணவரின் வற்புறுத்தலின் காரணமாகத்தான் போக்கிய ஒப்பந்தத்தில் நான் கையொப்பம் செய்ததாக நான் எங்கும் சொல்லவில்லை. தாவா வீட்டின் அகலம் கிழபுறமாக 15 அடி, மேற்குபுறமாக 14 1/2 அடி, வீட்டின் நீளம் வடக்குப்பக்கமாக 41 1/2 அடி, தென்புறமாக 45 அடி. மொத்தம் 638 ச.அடி. எனக்கும், மேற்படி அன்புசெல்வத்திற்கும் இடையே தவறான உறவு இருந்தது என்றாலும், அதுதான் என் கணவர் என்னைவிட்டு பிரிந்தற்குரிய காரணம் என்றாலும் சரியல்ல. நான் தாவா சொத்தின் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல.

எனக்கு எந்த காலத்திலும் வருமானம் கிடையாது என்றாலும், நான் சம்பாதித்த பணத்தை கொண்டு தாவா சொத்து வாங்கப்பட்டு அதில் வீடு கட்டப்பட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கூட்டுறவு வங்கியில் வாங்கப்பட்ட கடன் தற்போது வரை நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த கடனை கட்டக்கோரி எனக்கு வங்கியால் அறிவிப்பு அனுப்பப்படுகிறது என்றால் சரியல்ல. எனக்கு வருமானம் இருந்தால் அந்த கூட்டுறவு வங்கி கடனை அடைப்பத்ற்கு நான் முயற்சித்திருப்பேன் என்றாலும், எனக்கு வருமானம் வருவதாக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

எனது தோழிகளிடமிருந்து வாங்கப்பட்டதாக சொல்லப்படும் கடனானது எந்த தேதியில் வாங்கப்பட்டது என்று எனது பிராதிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது எனது

கணவரால் அவரது வருமானத்தை கொண்டு என்மீதிருந்த அன்பின் காரணமாக என் பெயரிலும் சேர்த்து கிரையம் வாங்கப்பட்டது என்றாலும், எனவே தாவா சொத்தில் நான் பாகம் கோரமுடியாது என்றாலும், வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

Sd/- **G. Sri Rama Jeyam)**
III Additional District Judge,Salem.

// True Copy //